10/=

பக்கங்கள் 06

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர் சனிக்கிழமை ஜூன் 17 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48

## பிள்ளையான் விடுதலை?

கொலை குற்றச்சாட்டில் கைது செய்யப் பட்டுள்ள கிழக்கு மாகாண முன்னாள் முதல மைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) விடுதலை செய்யப்படக் கூடிய வாய்ப்பு உள்ளதாக கொழும்பு ஊட கம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்த வழக்கில் ஏனைய இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்படாமல் உள்ளமையினால் இந்த கொலைக் குற்றச்சாட்டில் இருந்து பிள்ளையான் விடுதலை செய்யப்பட லாமெனக் கூறப்படுகிறது. (அ)



## விக்னேஸ்வரனை அகற்றியே தீருவோம்

“முதலமைச்சரைப் பதவிநீக்கும் போராட்டம் தொடரும். நம்பிக்கை யில்லாப் பிரேரணை வெற்றி பெறும். அது முடியாமல் போனால் இரண்டாவது தெரிவைப் பிரயோகித்து முதலமைச்சர் விக்கினேஸ் வரனைப் பதவியிலிருந்து அகற்றுவோம் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் சயந்தன் தெரி வித்துள்ளார். தமிழரசுக் கட்சியின் தற்போதைய நிலைப்பாடு தொடர்பில் இன்று மாட்டின் வீதியி லுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த சயந்தன் மேலும் தெரி விக்கையில், முதலமைச் சரைப் பதவிநீக்குவதற்கு நாங்கள் மூன்று ஆயுதங்களை வைத்திருக்கின்றோம். அதன் ஒரு வழிமுறைதான் பிரயோகிக்கப்பட்டுள்ளது. அது நம்பிக்கையில்லாத் தீர்மானம். அதில் தோல்வியடைந்தால்

06



முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு ஆதரவாக முல்லைத்தீவில் இன்று அமைதிப் பேரணி இடம்பெற்றது.

# சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி!

## சம்பந்தன் முதல்வருக்கு கடிதம்

கடந்த சிலதினங்களாக வடமாகாணத்தை உலுக்கிய முதலமைச்சர் மீதான நம்பிக்கை யில்லாப் பிரேரணை விவகாரம் சுமுகமான முடிவை எட்டும் வகையில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரனுக்கு கடிதமொன்ற அனுப்பி வைத்துள்ளார்.

“அமைச்சர்களான டெனீஸ்வரன், சத்தியலிங்கம் ஆகியோரை ஒருமாதக் கட்டாய விடுமுறையில் செல்லும் முடிவை விலக்கிக் கொண்டால், அவர்கள் மீதான விசாரணைக்கு எவ்வித பங்கமும் ஏற்படாமல் உத்தரவாதம் அளிப்பதாக” இந்தக் கடிதத்தில் சம்பந்தன் குறிப்பிட்டுள்ளார்.

சம்பந்தன் அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு-

“தங்கள் உரையின் பிரதியுடன் கடந்த 14.06.2017 அன்று அனுப்பியிருந்த உங்கள் கடிதத்துக்கு நன்றி.

நான் பின்வருவனவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தங்களால் அமைக்கப்பட்ட விசாரணைக்குழு நான்கு அமைச்சர்கள் தொடர்பில் தமது விசாரணைகளை நடத்தியிருந்தது.

விசாரணையைப் பூர்த்தி செய்து அவர் களது அறிக்கையை உங்களுக்கு

06



## கொழும்புக்கு ஓடுகிறார் ஆளுநர்

வட மாகாண சபையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தில் நடுவே ஆளுநர் ரெஜினோல்ட் கூரே அவசர அவசரமாக கொழும்புக்கு சென்றுள்ளார். முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில லாத் தீர்மானம் தொடர்பில் சட்ட ஆலோச னைப் பெறுவதற்காகவே ஆளுநர் இன்று அவசரமாக கொழும்பு சென்றுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கொழும்பிலுள்ள அரச தரப்பு அதிகாரிக ளுடன் விரிவாக ஆராய்ந்ததன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமையன்று உத்தியோக பூர்வ நடவடிக்கையை ஆளுநர் எடுப்பாரென்று கூறப்படுகிறது. (எ)

## நம்பிக்கையில்லாப் பிரேரணையால் விக்னேஸ்வரனை அகற்றமுடியாது!

### அதுவே சட்டமென்கிறார் டிலான் பெரேரா

“நம்பிக்கையில்லாப் பிரேரணை ஊடாக வடக்கு முதல்வரை பதவி நீக்க முடி யாது. ஆனால் இலங்கைத் தமிழ ரசுக் கட்சியின் பொதுச் செய லாளர் நினைத்தால் ஆளுநருக்கு கடிதம் எழுதி முதலமைச்சரை மாற்றலாம். அதுவே சட்டம். இதுகூடத் தெரியாமல் இவர்கள் அரசியல் செய்துகொண்டி ருப்பது வியப்பளிக்கின்றது” என்று சிறிலங்காசுதந்திரக் கட்சியின் பேச்சாளரும் இரா ஜாங்க அமைச்சருமான டிலான் பெரேரா தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையில் ஏற்பட்டுள்ள நெருக்கடி மற் றும் நம்பிக்கையில்லா பிரே ரணை விவகாரம் தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

06

## டிசெம்பரில் தேர்தல்



மாகாண சபைகளின் ஆட்சி காலம் நிறை வுக்கு வந்தவுடன், எதிர்வரும் டிசெம்பர் மாதம் முதல் வாரத்தில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு தயாராவதாக, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கிழக்கு, சப்ரகமுவ மற்றும் வடமத்திய ஆகிய மாகாண சபை அரசுகளின் ஆட்சி நிறைவுக்கு வரவுள்ளது. இதன்பின்னர்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நீதி முறைக்கு அமைய தேர்தல் நடைபெறும். அது எக்காரணம் கொண்டும் ஒத்திவைக் கப்படமாட்டாது என, தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

## பருத்தித்துறையில் விபத்து




பருத்தித்துறை சாரையடிப் பகுதியில் இன்று நண்பகல் இரு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மூவர் படுகாயமடைந்தனர்.

ஸ்கூட்டி ரக மோட்டார் சைக்கிளில் வந்த தாயும் மகளும், எதிரே வந்த இன்னொரு மோட்டார் சைக்கிளுடன் நடு வீதியில் மோதுண் டனர். இதனால் தூக்கி வீசப்பட்ட மூவரும் காயங்களுடன் மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர். (அ-11)

# மைத்திரியின் யோகா



சர்வதேச யோகா தின நிகழ்வுகள், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில், இன்று முற்பகல் சுதந்திரச் சதுக்க வளாகத்தில் நடைபெற்றது.

இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் சர்வதேச யோகா தின நிகழ்வுகள் மூன்றாவது தடவையாக இலங்கையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.(ஆ)

# கப்பம் கேட்ட இருவர் கைது

கப்பம் பெறுவதற்கு முயற்சித்த இரண்டு பேர் மீரிகமட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப் பட்டுள்ளனர். மீரிகம, கிரிஉல்ல வீதியில் உள்ள தங்க ஆபரணங்களை விற்பனை செய்யும் கடை ஒன்றுக்கு தொலைபேசி மூலம் அழைப்பை ஏற்படுத்தி 5 இலட்சம் ரூபா வழங்குமாறு கப்பம் கோரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இது சம்பந்தமாக அந்த கடையின் உரிமையாளரினால் மீரிகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், சந்தேகநபர்கள் பணத்தை பெறுவதற்காக வருகை தந்த போது கைது செய்தனர்.

குருகொடல்ல, லோலுவாகொட பிரதேசத்தைச் சேர்ந்த 34 மற்றும் 47 வதுடைய இரண்டு பேரே கைது செய்யப்பட்டுள்ளதுடன், இன்று அவர்கள் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட உள்ளனர். (உ)

# ரம்புட்டான் ஆசையால் அகப்பட்ட திருடன்

வீடொன்றில் நுழைந்து 40 ஆயிரம் பெறுமதியான தங்க நகை மற்றும் பணம் திருடிச் சென்ற நபர் ஒருவர் ரம்புட்டான் தோலினால் பொலிஸாரிடம் சிக்கினார்.

உடகம தெற்கு பியதிலக்க மாவத்தை வீடொன்றில் திருடுவதற் காக குறித்த சந்தேகநபர் சென்றுள்ளார். எனினும் வீட்டு வாசலில் பழுத்துத் தொங்கிய ரம்புட்டான்க ளைக் கண்டதும் திருடனால் ஆசையை அடக்க முடியவில்லை. மரத்தில் ஏறி ஆசைதீரும் வரை ரம்புட்டான்களை தின்றுள்ளான்.

பின்னர் வீட்டிற்குள் நுழைந்த திருடன் அங்கிருந்த பணம் மற்றும் தங்க நகைகளை திருடி விட்டு தப்பி சென்றுவிட்டான்.

இந்தத் திருட்டு சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார். அதற்கமைய காலி பொலிஸார் மோப்பநாயுடன் அங்கு சென்றனர். திருடன் சாப்பிட்ட ரம்புட்டான் தோலை வைத்து மோப்பம் பிடித்த நாய், திருடியவரைக் காட்டிக் கொடுத்துள்ளது. சந்தேகநபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.(ஆ)

# வருவார் ஞானசாரர்

"ஞானசாரரை அரசு ஒளித்து வைத்துள்ளதாக மகிந்த ராஜபக்ச கூறியமை சிறுபிள்ளைத்தனமானது. ஞானசாரதேரர் விரைவில் வெளியே வருவார்"என பொதுபலசேனா அமைப்பின் பிரதம நிறைவேற்று அதிகாரி திலந்த விதானகே தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறினார்

"ஞானசாரரை யாரும் ஒளித்து வைக்கவும் இல்லை, அவர் மறைந்தும் இருக்கவில்லை என்பதே உண்மை" என்றார்.(ஆ)

# சீருடையை மாற்றும் எண்ணம் இல்லை



"பாடசாலை மாண வர்களின் சீருடையை மாற்றியமைத்தல் தொடர்பாக அரசாங்கம் எந்தவிதமான தீர்மானங் களையும் மேற்கொள்ள வில்லை" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

"இணையம் மற்றும் சில ஊடகங்களினூடாக இன்று இனவாதத்தை தூண்டி இனங்களுக்கி டையே வேற்றுமையை விதைத்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எந்தவொரு தனி நபரோ அல்லது அமைப்போ மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படும் வகையில் நடந்து கொள்ளக் கூடாது" என்றும் கூறினார். (அ)

# லொறி குடைசாய்ந்து இருவர் பரிதாபப் பலி

ரயர் காற்றுப் போனதால் லொறியொன்று குடைசாய்ந்ததில், அதில் பயணித்த இருவர் உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் திருகோணமலை தோப்பூரில் நேற்று இடம்பெற்றது.

மாவனல்லை பகுதியிலிருந்து விற்பனைக்காக மரக்குற்றிகளை ஏற்றி வந்த லொறியே குடைசாய்ந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர் கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளார்.

விபத்து தொடர்பாக மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ஆ)

# சிறுமிகளுக்கு நீதி வேண்டும் உடுவிலில் இன்று பேரணி



திருகோணமலை மூதூர்ப் பகுதியில் பாடசாலைச் சிறுமிகள் மீது மேற்கொள்ளப்பட்ட பாலியல் வன்கொடுமையைக் கண்டித்து, உடுவில் அறநெறிப் பாடசாலை மற்றும் உடுவில் பிரதேச செயலக இந்து சமய அபிவிருத்திக் குழுவினரும் இணைந்து கண்டனப்பேரணி ஒன்றை இன்று நடத்தினர்.

இந்தக் கண்டனப் பேரணி மருதனார்மடம் ஆஞ்சநேயர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி உடுவில் பிரதேச செயலகம் வரை இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட சிறுமிகளுக்கு நீதி வேண்டியும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியும் பேரணியின் முடிவில் , ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் மனுவொன்று வடக்கு ஆளுநரிடமும் கையளிக்கப்பட்டது.(ஆ)

# கிளிநொச்சியில் சர்வதேச யோகா தினம்!






யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச யோகா தினம் இன்று கிளிநொச்சியில் அனுஷ்டிக்கப்பட்டது.

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இந்தியத் தூதரகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் யோகா பயிற்சி நிகழ்வொன்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட் டங்களில் இருந்து நூற்றுக் கணக்கான பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டிருந்தனர். கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் இந்திய துணை தூதுவர் நடராஜன் தலைமையில் நடைபெற்ற யோகா தின நிகழ்வில் ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உனாமெக்குலே, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். (உ-13)

# அரியாலை சரஸ்வதியின் வலைப்பந்தாட்டம்



அரியாசலை சரஸ்வதி சன சமூக நிலையத்தின் 98ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்டுவரும் விளையாட்டு விழாவின் ஓரங்கமான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று நடைபெற்றன.

இன்று காலை ஆரம்பித்த இவ்வலைப்பந்தாட்டத் தொடரின் லீக் போட்டி ஒன்றில் வின்ஸ்ரார் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் இந்து விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்தப் போட்டியில் வின்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 18:15 என்ற புள்ளிக்கணக்கில் இந்து அணியை வீழ்த்தியது.

இந்தத் தொடரின் லீக் போட்டிகள் அனைத்தும் முடிவடைந்த பின்னர் இறுதிப் போட்டி இன்று மாலை நடைபெறுகின்றது. (ஐ)

# கறுப்புப் பணம்

## காட்டிக்கொடுக்கிறது சுவிற்ஸர்லாந்து




இந்தியாவைச் சேர்ந்த பல முக்கிய பிரமுகர்கள் தங்களின் சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் கருப்புப் பணத்தை சுவிற்ஸர்லாந்தில் பதுக்கி வைத்துள்ளனர். இதுதொடர்பான விவரங்களை பெறும் முயற்சியில் மத்திய அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்நிலையில், கறுப்பு பணம் குறித்த தகவல்களை உடனடியாக பகிர்ந்துகொள்ளும் வகையில் தானியங்கி தகவல் பரிமாற்ற திட்ட வரைவு அறிவிக்கைக்கு சுவிற்ஸர்லாந்து பெடரல் கவுன்சில் நேற்று ஒப்புதல் அளித்துள்ளது. இதன்படி, எடுக்கப்படும் முடிவின் மீது வாக்கெடுப்பு எதுவும் நடத்தப்படாது. அதாவது, இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் மேற்கொண்டு கால தாம தம் ஏற்படாது. இந்த புதிய திட்டத்தின் மூலம், இந்தியா மற்றும் 40 நாடுகளுடன் நிதி கணக்கு தொடர்பான விவரங்களை தானாகவே பகிர்ந்து கொள்வதை சுவிற்ஸர்லாந்து உறுதி செய்துள்ளது. இதுகுறித்து சுவிஸ் பெடரல் கவுன்சில் கூறும்போது, "2018ஆம் ஆண்டில் இந்த புதிய முறையை அமுல்படுத்த திட்டமிட்டிருக்கிறோம். முதல் தகவல் தொகுப்பு 2019ஆம் ஆண்டு பகிர்ந்து கொள்ளப்படும்" என தெரிவித்துள்ளது. (உ)

## விண்வெளியில் எக்ஸ்ரே டெலஸ்கோப்



விண்வெளி ஆராய்ச்சியில் சீனா முன்னேறி வருகிறது. இந் நிலையில் தற்போது விண்வெளியில் ஏற்படும் மாற்றங்களை உடனுக்குடன் அறிய அதிநவீன எக்ஸ்ரே டெலஸ்கோப்பை நிறுவியுள்ளது. 2.5 தொன் எடையுள்ள இந்த டெலஸ்கோப் மார்ச்-4பி ராக்கெட் மூலம் நேற்று விண்ணுக்கு அனுப்பப்பட்டது. வடமேற்கு சீனாவில் கோபி பாலைவனத்தில் உள்ள ஜியூ குயான் செயற்கை கோள் மையத்தில் இருந்து ஏவப்பட்டது. எக்ஸ்ரே டெலஸ்கோப்பை பூமிக்கு மேல் 550 கி.மீ. தூரத்தில் மார்ச்-4பி ரொக்கெட் தூக்கி சென்று நிலை நிறுத்தியது. அதன் மூலம் வானத்தில் ஏற்படும் கருந்துளைகள், கடுமையான காந்த வயல்கள் மற்றும் வெடித்து சிதறும் காமாக திர்களை விஞ்ஞானிகள் கண்டறிய முடியும். (உ)

## விண்வெளியில் உருவாகும் நாடு செப்ரம்பரில் அடிக்கல் நாட்டுவிழா



ரஷ்யாவைச் சேர்ந்த கம்ப்யூட்டர் விஞ்ஞானியும், ஏரோஸ்பேஷ் இன்டர்நேஷனல் ஆய்வு மைய தலைவருமான டாக்டர் இகோர் அசுர்பெய்லி விண்வெளியில் ஒரு நாட்டை உருவாக்க திட்டமிட்டுள்ளார். அதற்கு 'அஸ்கார்சியா' என பெயரிடப்பட்டுள்ளது. விண்வெளியில் உருவாகும் புதிய நாடு குறித்த அறிவிப்பை கடந்த ஆண்டு ஒக்ரோபர் 12ஆம் திகதி பாரீசில் அறிவித்தார். அதில் குடியேற விரும்புபவர்கள் விண்ணப்பம் செய்யலாம் என அறிவிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து சர்வதேச அளவில் 200 நாடுகளை சேர்ந்த 5 லட்சம் பேர் விண்ணப்பம் செய்தனர். அறிவிப்பு வெளியிட்ட 20 நாளில் இவ்வளவு பேர் மனு செய்து இருந்தனர். அவர்களில் 2 லட்சம் பேர் தேர்ந்தெடுக்கப்பட்டு புதிதாக உருவாகும் விண்வெளி நாட்டில் குடியேற அனுமதிச் சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் விண்வெளி நாடு உருவாக்க கட்டுமான பணிக்கான அடிக்கல் நாட்டு விழா வருகிற செப்டம்பர் மாதம் நடைபெற உள்ளது. அதற்கான அடிக்கல் அகார்சியா-1 என்ற மைக்ரோ செயற்கை கோள் மூலம் வருகிற செப்ரெம்பரில் அனுப்பப்பட உள்ளது. அது ஒரு ரொட்டி போன்ற அமைப்பில் 20 செ.மீ. நீளம் இருக்கும். 2.3 கிலோ எடை இருக்கும். 'விண்வெளி நாட்டில் மக்கள் குடியேறும் முதல் படியாக அஸ்கார்சியா-1 விண்கலம் செயல்படும்' என டாக்டர் அசுர்பெய்லி தெரிவித்துள்ளார். (உ)

# ஆர்.எஸ்.எஸ். சந்திப்பு



இந்திய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று ஆர்.எஸ்.எஸ். தலைவர் மோகன் பகவத்துக்கு அழைப்பு விடுத்து இருந்தார். இதை ஏற்று மோகன் பகவத், ஜனாதிபதி மாளிகைக்கு சென்றார். அங்கு அவருக்கு, பிரணாப் முகர்ஜி மதிய விருந்து அளித்தார். இந்தச் சந்திப்பு குறித்து ஆர்.எஸ்.எஸ். தரப்பில் கூறுகையில், இது ஏற்கனவே திட்டமிட்ட மரியாதை நிமித்தமான சந்திப்பு தான். இதில் அரசியல் எதுவும் இல்லை' என்றனர். ஜனாதிபதி தேர்தல் அடுத்த மாதம் நடைபெற உள்ள நிலையில் அந்தப் பதவிக்கு மோகன் பகவத் பெயரை அறிவிக்க வேண்டும் என்று சிவசேனா கட்சியினர் பா.ஜனதா கட்சியிடம் வலியுறுத்தி வந்தனர். இந்தச் சூழ்நிலையில் பிரணாப் முகர்ஜியை, மோகன் பகவத் சந்தித்தது அரசியல் வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. (உ)

## டயானாவின் காலணிகள் ஒன்றரை இலட்சத்துக்கு ஏலம்



இங்கிலாந்தின் மறைந்த இளவரசி டயானா இளவரசர் சார்ள்ஸை திருமணம் செய்யும் முன்பு முன்பள்ளி ஆசிரியையாக இருந்தார். அப்போது அவர் தனது 19ஆவது வயதில் அணிந்திருந்த வெள்ளை நிற "காலணிகள்" இங்கிலாந்தில் உள்ள வின்டர்ஸ் ஏல நிறுவனத்தில் ஏலம் விடப்பட்டது. அவை இந்திய பெறுமதியில் ரூபா ஒன்றரை லட்சத்துக்கு ஏலம் போனது. அந்த காலணிகள், 1977-78 காலகட்டத்தில் டயானா தனது நண்பர் ஒருவரின் வீட்டில் விட்டுச் சென்றவை ஆகும். முன்பள்ளி ஆசிரியையாக பணியாற்றியபோது டயானா அந்தக் காலணிகள் அணிந்துகொண்டு எடுத்த புகைப்படங்கள் இருப்பதாகவும் ஏல நிறுவனம் தெரிவித்துள்ளது. இதுதவிர கென்சிங்டன் அரண்மனை குறிப்பேட்டில், தியானம் மற்றும் பிரெஞ்சு தத்துவம் தொடர்பாக இளவரசி டயானா எழுதிய குறிப்பும் ஏலம் விடப்பட்டது. இந்தக் குறிப்பு 1400 பவுண்டுகளுக்கு ஏலம் போனது. இளவரசர் சார்ள்ஸை டயானாவை பிரிந்த 2 நாள் கழித்து எழுதிய கடிதங்களும் ஏலம் விடப்பட்டன. (உ)



## ரஷ்ய விவகாரத்தில் இடையூறு செய்தாரா?

# டிரம்பிடம் விசாரணை

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசு கட்சி வேட்பாளராக போட்டியிட்ட டிரம்பின் வெற்றிக்காக ரஷ்யா தலையீட்டதா என்பது தொடர்பாக அந்த நாட்டு உளவுத்துறையின் முன்னாள் இயக்குனர் ராபர்ட் முல்லர் நடத்தி வருகிற விசாரணை சூடுபிடித்து வருகிறது. ஏற்கனவே இந்த விவகாரம் குறித்து விசாரணை நடத்திய அமெரிக்க உளவுத்துறையின் மற்றொரு முன்னாள் இயக்குனர் ஜேம்ஸ் கோமி, "முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக்கேல் பிளின் மீதான ரஷ்ய தொடர்பு குறித்த விசாரணையை கைவிடுமாறு டிரம்ப் எனக்கு அழுத்தம் தந்தார் மேலும், இதில் தன்னை விசாரணைக்கு உட்படுத்தவில்லை என்று பகிரங்கமாக கூறுமாறும் டிரம்ப் கேட்டுக் கொண் டார்" என்று கூறினார். இந்த நிலையில், ஜேம்ஸ் கோமி, எப்.பி.ஐ. இயக்குநர் பதவியில் இருந்து நீக்கப்பட்ட பிறகு, ரஷ்ய விவகாரத்தில் நீதிக்கு இடையூறாக, நீதியை தடுக்கிற வகையில் டிரம்ப் செயல்பட்டாரா என்பது பற்றி ராபர்ட் முல்லர் தலைமையிலான குழு விசாரணை நடத்தி வருவதாக 'வாஷிங்டன் போஸ்ட்' ஏடு செய்தி வெளியிட்டுள்ளது. (ஊ)

## சுனாமி மிதவை மாயம்

சுனாமி எச்சரிக்கை தொடர்பில் முன்னரே அறிந்து கொள்வதற்காக பொருத்தப்பட்டுள்ள சுனாமி தரவு மிதவை பெப்ரவரி 29ஆம் திகதி முதல் தகவல் வழங்குவதனை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அந்தமான் தீவுக்கு அருகில் சர்வதேச கடல் எல்லையில் இந்த மிதவை பொருத்தப்பட்டிருந்தது. எனினும் அது தற்போது காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ)




# ஓவலில் நாளை இறுதிப் போர்

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியா-பாகிஸ்தான் அணிகள் நாளை மோதவுள்ளன.

கடந்த சில வாரங்களாக நடைபெற்று வந்த இத்தொடரில் மொத்தம் 8 அணிகள் பங்கேற்றன. இவை இரண்டு பிரிவுகளாக்கப்பட்டு லீக் முறையில் தலா 3 போட்டிகளில் பங்கேற்றன.

அதன்படி 'ஏ' பிரிவில் இடம்பிடித்த அணிகள் எதுவும் இறுதிப் போட்டிக்கு நுழைய முடியவில்லை. மாறாக 'பி' இடம்பிடித்திருந்த இரு அணிகளே இறுதிப் போட்டிக்கு முன்னேறின. அதிலும் இரு ஆசிய அணிகள் களம் காணவுள்ளமை குறிப்பிடப்பிடத்தக்கது.

நாளை பிற்பகல் 3 மணிக்கு லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெறும் இப்போட்டி ஆசிய கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

லீக் போட்டிகளில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் ஏற்கனவே மோதியிருந்தன. அந்த ஆட்டத்தில் இந்திய அணி இலகுவாக வெற்றிபெற்றிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புகழ்ந்து தள்ளிய கோஹ்லி

பங்களாதேஷுக்கு எதிரான அரையிறுதியில் திருப்பத்தை ஏற்படுத்திய பகுதி நேரப் பந்துவீச்சாளர் கேதர் ஜாதவைப் பந்துவீச அழைத்ததில் டோனிக்கும் முக்கிய பங்கு உண்டு என்று இந்திய அணித்தலைவர் விராட் கோஹ்லி கூறியுள்ளார்.

சம்பியன்ஸ் கிண்ணக் கிரிக்கெட்டில் நேற்றுமுன்தினம் நடந்த அரையிறுதியில் இந்திய அணி 9 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வென்று இறுதிப்போட்டிக்குள் நுழைந்தது.

இந்தப் போட்டி குறித்து இந்தி அணித்தலைவர் விராட் கோஹ்லி கூறுகையில்,

"கேதர் ஜாதவ் அடுத்தடுத்து கைப்பற்றிய 2 விக்கெட்டுகளே ஆட்டத்தின் திருப்புமுனையாகும். முக்கியமான கட்டத்தில் கேதர் ஜாதவை பந்து வீச அழைத்த முடிவுக்காக ஒட்டுமொத்த பாராட்டையும் நான் மட்டுமே எடுத்துக்கொள்ளமாட்டேன்.

"நேர்மையாக சொல்ல வேண்டும் என்றால் விக்கெட்காப்பாளர் டோனியுடன் ஆலோசித்த பிறகு இந்த முடிவை எடுத்தேன். எனவே இந்த பாராட்டு டோனிக்கும் போய் சேர வேண்டும்.

"கேதர் ஜாதவ் வலைப்பயிற்சியில் அதிகமாக பந்துவீசியதில்லை. ஆனால் அவர் ஒரு சாதுர்யமான கிரிக்கெட் வீரர். எந்த இடத்தில் துடுப்பாட்டவீரர்கள் தடுமாறுவார்கள் என்பதை நன்கு தெரிந்து வைத்திருக்கிறார்.

வேகப்பந்து வீச்சாளர்கள் புவனேஷ்வர்குமார், பும்ரா ஆகியோரும் அற்புதமாக பந்து வீசி அசத்தினர்" - என்றார். (ஐ)

# சூதாடியே இறுதிக்குள் நுழைந்தது பாகிஸ்தான்



பாகிஸ்தான் கிரிக்கெட் அணி மீது அந்த நாட்டு அணியின் முன்னாள் அணித்தலைவர் அமிர் சோகைல் மறைமுகமாக சூதாட்ட குற்றச்சாட்டை சுமத்தியுள்ளார்.

இது குறித்து அமிர் சோகைல் தொலைக் காட்சி விவாத நிகழ்ச்சியில் பேசுகையில்,

"பாகிஸ்தான் அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியதன் பின்னணியில் வெளிப்புற காரணிகள் இருக்கின்றன.

பாகிஸ்தான் அணி சிறப்பாகச் செயற்படும் நிலையில் இந்த முன்னேற்றம் குறித்து அணித்தலைவர் சர்ப்ராஸ் அகமது விளக்கம் அளிக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் (பாகிஸ்தான்) வெற்றிபெறுவதற்கு யாரோ ஒருவர் உதவி செய்திருக்கிறார். இந்த வெற்றியால் நீங்கள் மகிழ்ச்சியடைய எந்தக் காரணமும் இல்லை. திரைக்குப் பின்னால் என்ன நடந்தது என்பது எங்களுக்கு தெரியும். அந்த விவகாரத்துக்குள் செல்ல விரும்பவில்லை" என்றார்.


அமிர் சோகைலின் கருத்து பெருத்த சர்ச்சையாக உருவெடுத்ததைத் தொடர்ந்து அவர் பல்டி அடித்தார். தான் சொன்னது தவறாக புரிந்துகொள்ளப்பட்டதாக பின்னர் தெரிவித்துள்ளார். அத்துடன் பாகிஸ்தான் அணி இறுதிப்போட்டியில் வெற்றி பெற வாழ்த்துகள் என்றும் கூறினார். (ஐ)

# பேஸ்புக் கொமண்டில் GIF வசதி

ஜிப் - கிராபிக் இன்டர்சேஞ்ச் பார்மேட் (Graphic Interchange Format> GIF) ஜூன் 15, 1987 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப் பட்டது. அமெரிக்காவை சேர்ந்த மென்பொறியாளரான ஸ்டீவ் வில்வைட் என்பவர் கண்டறிந்த ஜிப்களின் 31ஆவது பிறந்த தினத்தை பேஸ்புக் கொண்டாடுகிறது.

அந்த வகையில் பேஸ்புக் கொமெண்ட்களில் ஜிப்களை பயன்படுத்தும் வசதி சேர்க்கப்பட்டுள்ளது. முன்னதாக ஜிஃப் வசதி பேஸ்புக்கின் மெசன்ஜர் செயலியில் மட்டுமே வழங்கப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

# வார்த்தைகளை சொன்னால் தட்டச்சுச் செய்யலாம்



அண்ட்ராய்டு ஸ்மார்ட் தொலைபேசியில் டைப் பண்ணாமலேயே பேசுவதன் மூலம் எழுத்துகளை உருவாக்கி மற்றவர்களுக்கு குறுந்தகவல் அனுப்பும் வசதிசெய்யப்பட்டுள்ளது.

உங்களது ஸ்மார்ட் கைத்தொலைபேசிகளில் ஸ்பீச் டு டெக்ஸ்ட் வசதியை இயக்குவது எப்படி என்பதை தொடர்ந்து பார்ப்போம்.

உங்களது ஸ்மார்ட் கைத்தொலைபேசியில் டைப் செய்ய வேண்டிய ஒப்ஷனில் கீபோர்ட் செயலியைத் திறக்கவேண்டும்.

இனி கீபோர்டின் ஓரத்தில் காணப்படும் மைக்ரோபோன் பட்டனை கிளிக் செய்ய வேண்டும்.

பின்னர் ஸ்பீக் நௌ (Speak Now) ஒப்ஷன் தெரிந்ததும், நீங்கள் டைப் செய்ய வேண்டியவற்றை பேசத் தொடங்கலாம்.

அடுத்து சிறப்புக் குறியீடுகளை டைப் செய்ய வேண்டுமெனில், அதற்கேற்ற வார்த்தைகளை கூற வேண்டும்.

புதிய பத்தியைத் தொடங்க அதற்கேற்ற கட்டளையைக் கூறவேண்டும். (ஒ)



# சீனாவில் 4000 திரையரங்குகளில்

எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் வெளிவந்த 'பாகுபலி-2' படம் சீனாவில் 4000 திரையரங்குகளில் வெளியாகவுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

எஸ்.எஸ்.ராஜமௌலி இயக்கத்தில் கடந்த ஏப்ரல் மாதம் வெளிவந்த 'பாகுபலி-2' இந்திய சினிமாவின் அனைத்து சாதனைகளையும் முறியடித்திருந்தது.

வசூலிலும் ரூ.1000 கோடியைத் தாண்டி இந்திய சினிமாவில் அதிக வசூலை ஈட்டிய படம் என்ற சாதனையையும் படைத்தது. ஆனால், அடுத்த சில வாரங்களிலேயே, இரண்டாவது இடத்தில் இருந்த 'தங்கல்' படம் சீனாவில் வெளியானது. அங்கு அந்த படத்துக்கு கிடைத்த வரவேற்பால் வசூலும் குவியத் தொடங்கியது. இதையடுத்து, அதிக வசூலில் முதலிடத்தில் இருந்த 'பாகுபலி-2' அடுத்த சில வாரங்களிலேயே இரண்டாவது இடத்துக்கு வந்தது.


இந்நிலையில், 'பாகுபலி-2' படத்தை சீனாவில் வெளியிட்டால் 'தங்கல்' சாதனையை முறியடித்துவிடலாம் என்ற நோக்குடன் செப்டம்பர் 17ஆம் திகதி 'பாகுபலி-2' படத்தை சீனாவில் வெளியிடவுள்ளனர்.

இப்படம் வெளிவந்து இன்றோடு 50 நாட்கள் ஆகியுள்ளது. 50 நாட்களுக்குள் ரூ. 1500 கோடிக்கும் மேல் வசூலித்து சாதனையும் படைத்துள்ளது. (ஒ)

# சிவாவுடன் இணையும் சிம்ரன், நெப்போலியன்







சிவகார்த்திகேயன்-பொன்ராம் கூட்டணியில் உருவாகும் படத்தில் சிம்ரன் நடிக்கவுள்ளார் எனச் செய்திகள் வெளியாகியுள்ளன.

'வருத்தப்படாத வாலிபர் சங்கம்', 'ரஜினிமுருகன்' ஆகிய வெற்றிப்படங்களைத் தொடர்ந்து சிவகார்த்திகேயன்-பொன்ராம் கூட்டணி மீண்டும் புதிய படத்தில் இணையவிருக்கிறது.

இப்படத்தை சிவகார்த்திகேயன் நடிப்பில் வெளிவந்த 'ரெமோ' படத்தை தயாரித்த் நிறுவனம் சார்பில் ஆர்.டி.ராஜா தயாரிக்கிறார்.

இப்படத்தில் கதாநாயகியாக சமந்தா நடிக்க விருக்கிறார். நகைச்சுவை வேடத்தில் வழக்கம்போல் சூரியே நடிக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் சிம்ரன் நடிக்கவிருக்கிறார். மேலும், நெப்போலியனும் முக்கியமான கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு பூஜை யுடன் நேற்று தொடங்கியுள்ளது. (ஒ)




## கிழிந்த நாணயத்தாள்களை மாற்ற முடியாது

சேதப்படுத்தப்பட்ட அல்லது சிதைக்கப்பட்ட நாணயத் தாள்களுக்காக இவ் வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம்திகதிக்குப் பின்னர் அதற்கான கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது என்று இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. நாணயத் தாள்களை சேதப்படுத்துதல், மாற்றங்களை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட செயற் பாடுகள் நிதிச் சட்டத்தின் கீழ் பாரிய குற்றமாகும். இவ்வாறான நாணயத் தாள்களை வைத்திருப் போர் அதன் பெறு மதிக்கான தொகையை செலுத்த வேண்டி வரும் என்றும்மத்திய வங்கி தெரிவித்துள்ளது. (உ)

## கவிதை வெளியீடு

த.நாகேஸ்வரன் தென் மராட்சியைச் சேர்ந்த தமிழ் ஆசானும் கவிஞருமாவார். அவர் எழுதிய “இதயக் கனல்” கவிதை நூல் வெளியீட்டுவைக்கப் படவுள்ளது. எதிர்வரும் 22.06.2017 வியாழக்கிழமை பி.ப 3 மணிக்கு சாவகச் சேரி சங்கத்தானை கம்பன் கல்லூரி வளா கத்தினுள் அமைந் துள்ள தென் மராட்சி இலக்கிய அணியின் தமிழ்க் கோட்ட மண்டபத் தில் குறித்த விழா இடம்பெற வுள்ளது. (உ)

## இன்றைய கருத்தோவியம்




## இந்தியப் பிரஜை நேற்றுக் கைது



செல்லுபடியான கடவுச்சீட்டு இன்றி சட்டவிரோதமாக இலங்கையில் தங்கி யிருந்த இந்தியர் ஒருவர் கைது நேற்று பண் டாரகமவில் செய்யப் பட்டுள்ளார். பண்டாரகம பொலி ஸாருக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து மேற்கொள் ளப்பட்ட தேடுதலி லேயே இந்த நபர் கைது செய்யப்பட் டுள்ளார். சந்தேக நபர் இன்று பாணந்துறை நீதவான் நீதிமன்றத் தில் ஆஜர்ப்படுத்தப் பட உள்ளார். (ஆ)

## நிதியமைச்சர்கள் சந்திப்பு



இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லியை, இலங்கை நிதிய மைச்சர் மங்கள சமரவீர சந்தித்து பேச்சு நடத்தினர். தென்கொரியாவில் நடை பெறும் ஆசிய உட்கட்ட மைப்பு முதலீட்டு வங்கியின் இரண்டாவது கூட்டத்தில் பங்கேற்பதற்காக அமைச்சர் மங்கள சமரவீர அங்கு சென்றுள்ளார். இதன்போதே இந்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி, இந்தோனேசிய நிதியமைச்சர் ஸ்ரீ முல்யானி இந்ராவடி ஆகியோரை அவர் சந்தித்துள்ளார். (உ)

## அரிசி தட்டுப்பாடு இல்லை



சந்தையில் அரிசி தட்டுப்பாடு ஏற்பட முடியாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித் துள்ளார். கையிருப்பில் உள்ள அரிசியைப் பேணு தல், எதிர்கால அரிசித் தேவை என்பன பற்றி ஜனாதிபதி செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலின்போது ஜனாதிபதி இந்த விட யத்தை குறிப்பிட்டார். சந்தையில் அரிசித் தட்டுப்பாடு நிலவுவதாக கிடைத்த தகவலுக்கு அமைய இந்தக் கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தது. உத்தரவாத விலையை விட கூடுதலான விலைக்கு அரிசி விற்பனை செய்யப்படுவதால் நுகர் வோர் எதிர்நோக்கும் நெருக்கடிகள் பற்றியும் ஜனாதிபதி இதன்போது கவனம் செலுத்தினார். களஞ்சியங்களில் காணப் படும் அரிசி பற்றியும் ஜனாதிபதி அதிகாரி களிடம் கேட்டறிந்தார். போதியளவிலான அரிசியை களஞ்சியங்களில் பேணுவதன் அவசி யத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார். (உ)

## படகுகளை விடுவிக்க இணக்கம்

இலங்கைக் கடற்படை யினால் தடுத்து வைக் கப்பட்டுள்ள இந்திய மீன்பிடிப் படகு களை சில நிபந்தனை கள் அடிப்படையில் விடுவிப்பதற்கு மீன் பிடித்துறை அமைச்சு தீர்மானித்துள்ளது. அமைச்சின் கேட்போர் கூடத்தில் கடற்றொ ழில் மற்றும் நீரியல் வள அமைச்சரும் மற்றும் மகாவலி இராஜாங்க அமைச்ச ருமான மகிந்த அமரவீர தலைமை யில் மீன்பிடி துறை சார்ந்த ஆலோசனைக் குழுக் கூட்டம் நேற்று இடம்பெற் றது. அங்கு இந்த தீர்மானம் அறிவிக் கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங் களில் சட்டவிரோத மாக இலங்கை கடற் பரப்பில் மீன்பிடி நட வடிக்கைகளில் ஈடு பட்ட இந்திய மீன வர்களின் படகுகளே இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருந் தாக குறிப்பிட்டார் அமைச்சர் . இந்திய அதிகாரிகளுடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையை அடுத்து, இந்தப் படகுகளை விடுவிப் பதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இலங்கை கடற்படை யினால் இதுவரை 140 இந்திய மீன்பிடிப் பட குகள் தடுத்து வைக்கப் பட்டுள் ளமை குறிப் பிடத் தக்கது (உ)




## சுகாதார அமைச்சர் அலட்சியமான பதில்

### தொடர்கிறது போராட்டம்

நிரந்தர நியமனம் வழங்கு மாறு கோரி 45 ஆவது நாளாக சுகாதாரத் தொண் டர்களின் போராட்டம் வவுனியாவில் இன்றும் தொடர்ந்தது. ஆயினும் அவர்களைச் சந் தித்த வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் போராட்டக்காரர்களை அலட் சியப்படுத்தும் விதத்தில் நடந்து கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இன்று காலை போராட் டக்காரர்களைச் சந்தித்த அமைச்சர் சத்தியலிங்கம் தனது சொகுசு வாக னத்தை விட்டு கீழிறங் காமால், அதில் இருந்த படியே உரையாடினார். பின்னர் அலட்சியமாக அவர்களுக்குப் பதில் சொல்லிவிட்டு அவர் அகன்றுவிட்டார் என போராட்டக்காரர்கள் விச னம் தெரிவித்தனர். (ஆ)

## ஆபத்து! ஐஸ் போதை!!



துரித கதியில் எலும்புகளை கரைக்கும் ஆபத்தான ஐஸ் போதைப் பொருட்கள் இலங்கையில் புழக்கத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐஸ் போதைப் பொருள் இரசாயன முறையில் தயாரிக்கப்படும் ஒரு போதைப் பொருளாகும். இதனைப் பயன்படுத்துவோர், குறுகிய காலத்தில் உயிரிழக்கும் ஆபத்தும் உள்ளது.இந்தப் போதைப் பொருளை பயன்படுத்தினால், எலும்புகள் துரிதமாக கரைந்து விடும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர். 10 இலட்சம் ரூபா பெறுமதியான 50 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இரண்டு இளைஞர்கள் கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவு தெரிவித்துள்ளது. (ஆ)


## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

வேலை நேரம்: மாலை 4 மணி முதல் மாலை 6.30 வரை (இரண்டரை மணித்தியாலங்கள்)

வேதனம்: 15,000 + ஊக்கப்படி

தொடர்புக்கு:
021 300 4848, 077 657 5907
ethirolimedia@gmail.com




## நாளை நாளும் கோளும்

18.06.2017 ஞாயிற்றுக்கிழமை ஏவிளம்பி வருடம் ஆனி மாதம் 04ஆம் நாள்

நவமி பி.ப. 10.33 வரை | உத்தரட்டாதி பி.ப. 02.18 வரை | அமிர்தயோகம்

இராகுகாலம் 04.23-05.53 | சுபநேரம் 08.53-10.23 | எமகண்டம் 11.53-01.23

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | பக்தி | பாராட்டு | கவனம் | தனம் | லாபம் | சோர்வு | வரவு | ஆதாயம் | இரக்கம் | நன்மை | பெருமை |

எதிரொலி
Ethiroli

**நம்பிக்கையில்லா...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

“மாகாண சபைச் சட்டத்தின் ஊடாக மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சி மாகாண சபைத் தேர்தலில் 50 வீதத்துக்கும் அதிகமான உறுப்பினர்களை பெறுகின்றதோ அந்தக் கட்சியின் பொதுச் செயலாளர் யாருடைய பெயரை பரிந்துரைக்கின்றாரோ அவர் முதலமைச்சராக நியமிக்கப்படுவார்.

பொதுச் செயலாளர் பரிந்துரை செய்யும் உறுப்பினரை ஆளுநர் முதலமைச்சராக நியமிக்கவேண்டும். அவ்வாறு 50 வீத உறுப்பினர்களை பெற்றகட்சி நியமிக்கும் முதலமைச்சரை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் நீக்க முடியாது. இதுதான் மாகாண சபை சட்டமாகும். வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரேவுக்கும் இந்த விடயம் தெரியவில்லை என்பதுதான் ஆச்சரியமாக உள்ளது என்றார்.

பிரபல சட்டத்தரணியான சுமந்திரனுக்கும் இந்த விடயம் தெரியாமல் இருக்குமா? அவருக்கு நிச்சயமாகத் தெரியும்.” என்று டிலான் கூறியுள்ளார்.

இதேவேளை - தமிழரசுக் கட்சியின் உறுப்பினராக வடக்கு முதல்வர் விக்னேஸ்வரன் உத்தியோகபூர்வமாக இணையவில்லை என்பதால், அவரை தமிழரசுக் கட்சியின் செயலாளர் ஆளுநருக்கு கடிதம் அனுப்பி நீக்கமுடியாத நிலை உள்ளதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.(அ)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடன்
# ஐ.நா. பிரதிநிதி சந்திப்பு



போராட்டத்தில் ஈடுபட்டுள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உனாமெக்குலே சந்தித்துள்ளார்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் பெயர்ப்பட்டியலை வெளியிடுமாறு வலியுறுத்தி, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் தொடர்ந்து கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களின் போராட்டம் நூறு நாட்களை கடந்து தீர்வின்றி தொடர்ந்து வருகின்ற நிலையில் இன்று மேற்படி சந்திப்பு இடம்பெற்றுள்ளது. இதன்போது கருத்து தெரிவித்த ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி உனாமெக்குலே,

“எனக்கும் இரண்டு மகன்மார்இருக்கிறார்கள். எனக்கும் அதன் வேதனை நன்றாக தெரியும். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் ஜனாதிபதி மைத்திபால சிறிசேனவை சந்தித்தமை தொடர்பாக நான் அறிந்திருந்தேன்” என்றார். (எ-13)

**விக்னேஸ்வரனை...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்னமும் இரண்டு வழிமுறைகள் உள்ளது. ஆனாலும் கூட எமக்கு சாதகமான முறையில் சமரசத்துக்கான நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தென்பட்டால் அதனைப் பற்றிப் பிடித்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்” என்றும் அவர் குறிப்பிட்டார். இதேவேளை முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமை பெற்றவரா? அவர் உறுப்புரிமைப் படிவம் நிரப்பிக் கொடுத்திருந்தாரா? என ஊடகவியலாளர்களால் கேள்விகள் கேட்கப்பட்டபோது அதற்கு பதிலளிப்பதிலிருந்து தவிர்த்து கேள்விக்கு சம்பந்தமில்லாது பதிலளித்துக்கொண்டிருந்தார்.

“ஒன்றைமட்டும் கூறுங்கள் முதலமைச்சர் விக்கினேஸ்வரன் தமிழரசுக் கட்சியின் உறுப்புரிமை பெற்ற உறுப்பினரா? இல்லையா” என என ஊடகவியலாளர் ஒருவர் மீண்டும் அழுத்தமாகக் கேட்டபோது ஊடக சந்திப்பை முடித்துக்கொள்வதாக அவர் எழுந்து சென்றுவிட்டார். (எ)

# குருதிக் கொடையில் முதல்நிலைக்கு வருவோம்

இலங்கையில் இரத்த தானம் வழங்குவதில் சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணத்தை கொண்டுவர முயற்சிக்கின்றோம் என யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் ரி. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெற்ற குருதிச் கொடையாளர் தினத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில், “குருதிக் கொடை தொடர்பில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஆங்கில ஊடகம் ஒன்று தவறான செய்தியை வெளியிட்டது. அதற்கு நாம் கடுமையான கண்டனத்தையும் எதிர்ப்பையும் வெளியிட்டு இருந்தோம். இரத்த தானத்தில் சிறந்த மாவட்டமாக யாழ்ப்பாணத்தைக் கொண்டு வர குருதி கொடையை ஊக்குவிக்க அனைவரும் முன்வரவேண்டும்.” எனத் தெரிவித்தார். (எ-01)

**சர்ச்சைக்கு...** (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பித்திருந்தார்கள். இதில் இருவர் குற்றவாளிகளாகக் காணப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய இருவரும் குற்றவாளிகளாகக் காணப்படவில்லை.

விசாரணைக் குழுவின் அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் செயற்படப்போவதாக மாகாண சபையில் தெரிவித்திருந்தீர்கள்.

குற்றவாளிகளாகக் காணப்பட்ட இரண்டு அமைச்சர்களையும் இராஜினாமா செய்யுமாறு நீங்கள் கோரிக்கை விடுத்திருந்தீர்கள். அந்தத் தீர்மானத்துக்கு எவரும் முறைப்பாடு தெரிவிக்கவில்லை.

விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக நீங்கள் எடுத்த நடவடிக்கை தொடர்பிலேயே முறைப்பாடு முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு முரணானதும் பொருத்தமற்றதாகவுமே பார்க்கப்படுகின்றது.

13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நான் தங்களுக்கு அழைப்பை ஏற்படுத்திப் பேசியபோது இத்தகைய நடவடிக்கை குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களினாலும் ஏனைய மாகாணசபை உறுப்பினர்களாலும் எதிர்க்கப்படக்கூடும் எனவும் இது குறித்து அவதானமாக செயற்படுமாறும் கூறியிருந்தேன்.

அத்துடன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏனைய பங்காளிக் கட்சிகளின் தலைவர்களோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் பேசியிருந்தபோதும், பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவருமான கௌரவ மாவை. சேனாதிராஜா அவர்களோடு இந்த விடயம் தொடர்பில் நீங்கள் கலந்துரையாடாமை தொடர்பிலும் எனது கரிசனையை வெளிப்படுத்தியிருந்தேன்.

அதன் பின்னர், அன்று நீங்கள் அவரோடு உரையாடியபோது குற்றவாளிகளாகக் காணப்படாத அமைச்சர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதனை உங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார்.

14ஆம் திகதி புதன்கிழமை, குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்களுக்கு எதிராகவும் தண்டனை நடவடிக்கையை அறிவித்திருந்தீர்கள்.

அதற்குப் பிற்பாடு இடம்பெற்றவை எல்லாமே நீங்கள் மேற்கொண்ட மேற்குறித்த நடவடிக்கையின் விளைவேயாகும்.

இச் சம்பவங்களை முடிவிற்குக் கொண்டுவர வேண்டுமெனில், முதலில் குற்றவாளிகளாக காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் தேவையான திருத்த நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பது எனது கருத்தாகும்.

அவசியமற்ற நடவடிக்கைகள் ஒற்றுமையின்மையை ஊக்குவிப்பதாகவும், வடமாகாண சபையின் நடவடிக்கைகளைப் பாதிப்பதாகவும் அமைந்துவிடக் கூடாது.

எனவே, உங்களது விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் தேவையான உடனடித் திருத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு நான் உங்களை கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இது, நீங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளும் விசாரணைகளுக்கு எவ்வித தடையும் ஏற்படுத்தாது என்பதனையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்”என்றுள்ளது.

இதேவேளை- அமைச்சர்கள் மீதான கட்டாய விடுமுறை உத்தரவை மீளப்பெற வேண்டுமாயின் அவர்கள் மீதான விசாரணைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படுத்தப்படாது என எழுத்துமூல உத்தரவாதம் தர வேண்டுமெனவும், அமைச்சர்கள் இருவரும் தம் மீதான உத்தரவை மீளப்பெற விண்ணப்பிக்க வேண்டுமெனவும் முதலமைச்சர் நிபந்தனை விதித்திருந்தார். இந்த நிலையிலேயே எழுத்துமூல உத்தரவா தத்தை சம்பந்தன் வழங்கியுள்ளார்.

அத்துடன் அமைச்சர்கள் இருவரும் தம் மீதான விடுமுறை நடவடிக்கையை மீளப்பெற விண்ணப்பிக்க உள்ளதாகவும் தெரியவருகின்றது. இதனால் இந்த விவகாரம் சுமுகநிலையை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.(அ)




இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில 17.06.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.